1987 மார்ச் 25]

பட்டை அரசாங்கமே ஏற்று, அதாவது நல்ல விலைக்கு வாங்கி விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கச் செய்யுமா என்பதைப் பற்றி அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே இருக்கின்ற அரசு சம்பந்தமான நிறுவனத்திலே இதை வாங்குகிறார்கள். அதேபோன்று தனியார் சம்பந்தப்பட்ட நிறுவனத்திலும் உற்பத்தியாளர்களிடம் இருக்கும் பட்டை வாங்கிக் கொண்டிருக்கின்றார்கள். அப்படி அவர்கள் வாங்கிக் கொண்டிருக்கின்ற பட்டிற்கு நல்ல விலை கொடுக்கிறார்கள் என்றும் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத்தை அடிப்படையாக வைத்து பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 171 முதல் 175 வரை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகின்றன.

வினா எண் 176 மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகின்றது.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2. தகவல் கோரல்.

உறுப்பினர்கள் அறைகளில் தொலைபேசி இயங்காமலிருந்தது குறித்து.

திரு. அ. மலர்மன்னன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் ஏற்கெனவே என்னிடம் கேட்டீர்கள். நான் பதில் சொல்லியிருக்கிறேன்.

[1987 மார்ச் 25

திரு. அ. மலர்மன்னன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றே ஒன்று கேட்டுத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். எங்கள் அறைகளில் டெலிபோன் இணைப்பை துண்டித்திருக்கின்றார்கள். கடந்த மாதம் 6 ஆம் தேதியில் இருந்து 9 ஆம் தேதிவரையில் எங்களுடைய அறைகளிலே இருக்கும் டெலிபோன் இணைப்பு துண்டிக்கப்பட்டிருந்தது. அதற்கு காரணம் கேட்கிறபோது, தமிழக அரசு பணம் கட்டாததனால் இப்படி இணைப்பு துண்டிக்கப்பட்டதாக சொன்னார்கள். ஆகவே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கெனவே பணம் கட்டிவிட்டிருக்கின்றார்கள். அந்தப் பிரச்சினை அலுவலகம் சம்பந்தபட்டது. அதுபற்றி தெரிந்துகொண்டு மீண்டும் இங்கே பேசுவது முறையல்ல.

திரு. அ. மலர்மன்னன் : பேரவைத் தலைவர் அவர்களே, 6 ஆம் தேதியிலிருந்து 9 ஆம் தேதி வரை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அறைக்கு வந்தால் அங்கே பேசலாம்.

3. கவன ஈர்ப்பு.

(அ) விவசாயிகளுக்கு வெடிமருந்துப் பொருள்கள் கிடைப்பதில் தடங்கல்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகம் முழுவதும் வெடி மருந்து, வெடி மருந்து பொருட்கள் (கிணறு தோண்டப் பயன்படுத்தப்படும் தோட்டாக்கள்) விநியோகம் தடை செய்யப்பட்டுள்ளதால், தற்போதுள்ள வறட்சியின் காரணமாக விவசாயிகள் கிணறுகளை ஆழப்படுத்த முடியாத நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.